**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13–ஆம் தேதி வெள்ளிக்கிழமை**

**EA No.4/2025 in EP No.28/2022 in OS No.33/2011**

1. சிவகாமி
2. சொலிஷா
3. சமுத்திரா . . . மனுதாரர்கள்/ மனுதாரர்கள்

**/எதிர்/**

1. பழனியப்பன் (இறப்பு)
2. அன்புராஜ் . . . எதிர்மனுதாரர்கள்/ எதிர்மனுதாரர்கள்

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில், பிரிவு 151 சிபிசி–ன் படி, வீட்டின் பூட்டை உடைத்து சொத்தின் சுவாதீனத்தை அமீனா மூலம் எடுக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 21.06.2025 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 02.03.2026 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 13.03.2026 |
| மனுதாரர்களுக்காக | : | திரு.V.R.பாலசுப்ரமணியன் – வழக்கறிஞர் |
| முதல் எதிர்மனுதாரர் | : | இறப்பு |
| இரண்டாவது எதிர்மனுதாரருக்காக | : | திரு.S.சுதாகர் – வழக்கறிஞர் |

**1) மனுவின் சுருக்கம் :–**

இம்மனுவின் மனுதாரர்கள் நிறைவேற்று மனுவில் மனுதாரர்கள். இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் மனு சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கக் கோரி நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 03.01.2025–ம் தேதி அன்று மனு சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைவு செய்ய இந்நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட, மனுதாரர்கள் தரப்பில் படி செலுத்தப்பட்டு, சொத்தினை ஒப்படைவு செய்ய சென்ற சமயத்தில் எதிர்மனுதாரர்கள் வீட்டின் கதவினை பூட்டிக்கொண்டு

சொத்தின் சுவாதீனத்தை எடுக்க விடாமல் இடையூறு செய்வதால், மேற்படி வீட்டின் பூட்டை உடைத்து சொத்தின் சுவாதீனத்தை அமீனா மூலம் எடுக்க உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) இரண்டாவது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. முதல்நிலை தீர்ப்பாணையானது ஒருதலைபட்ச தீர்ப்பாணையாகும். இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து, ASSR No.5287/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள் ஆஜராவதற்கு 14.10.2025–ம் தேதி அறிவிப்பு அனுப்பப்பட்டு வாய்தா உள்ளது. மேற்படி சங்கதியை குறிப்பாணை மூலம் நீதிமன்றத்திற்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. மேம்முறையீடானது நிலுவையில் உள்ள நிலையில், இந்நீதிமன்றத்திற்கு இடைக்கால உத்தரவு ஏதும் பிறப்பிப்பதற்கு உரிமை இல்லை. எனவே, மனுதாரர்களின் மனுவினை இரண்டாவது எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

3) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். இருதரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4) மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், மனுதாரர்கள் அவர்களது மனுவினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்துள்ளதால், மனுதாரர்கள் கோரிய பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

5) இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், மனுதாரர்கள் அவர்களது மனுவினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை என்றும், எனவே, மனுதாரர்களின் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

6) **தீர்வு :-**

**6 (1)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர்கள் / தீர்ப்பாணை பெற்றவர்கள் இறுதிநிலை தீர்ப்பாணையை அனுசரித்து தீர்ப்பாணையில் குறிப்பிட்டுள்ளபடி தாவா சொத்துக்களை அமீனா மூலம் சுவாதீனம் பெறுவதற்கு உத்தரவு பிறப்பிக்கக் கோரி உரிமையில் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 35-ன் கீழ் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு, இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு, விரிவான விசாரணைக்கு பின்னர் எதிர்மனுதாரர் சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டும் என கடந்த 04.01.2025-ம் தேதி அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், அமீனா தாக்கல் செய்துள்ள அறிக்கையில் நிறைவேற்று மனு சொத்தினை சுவாதீனம் எடுப்பதற்கு காவல்துறை உதவி மற்றும் சர்வேயர் உதவி தேவை என கட்டளை திருப்பப்பட்டுள்ளதால், மனுதாரர்கள் தரப்பில் மேற்படி EA No.3/2025, 4/2025, 5/2025 ஆகிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6 (2)** இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், ASSR No.5287/2025 என கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மேல்முறையீடானது நிலுவையில் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி சங்கதிக்கு ஆதரவாக ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யப்படவில்லை. மாண்புமிகு கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் இந்நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பாணையை ரத்து செய்தோ, மேற்படி நிறைவேற்று மனுவினை தொடர்ந்து நடத்தக்கூடாது என தடை உத்தரவு எதனையும் பிறப்பிக்கவில்லை. மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள் தீர்ப்பின் பலனை பெறுவதற்கு உரிமை உடையவர்கள் ஆவார்கள். இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, இம்மனுவானது அனுமதிக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

7) **முடிவாக,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.13 18:41:48 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :–** இல்லை.
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :–** இல்லை.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.13 18:41:51 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.